بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم    وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5

இதழ் 14

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

08 ஷஃபான் 1441 ஹிஜ்ரி கமரி 02 ஷஹாதத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
02 ஏப்ரல் 2020

## அல்லாஹ்வின் கட்டளை

وَمَا كَانَ اللّٰهُ لِيُطْلِعَكُمْ عَلَى الْغَيْبِ
وَلٰكِنَّ اللّٰهَ يَجْتَبِيْ مِنْ رُّسُلِهٖ مَنْ يَّشَآءُ
فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ وَاِنْ تُؤْمِنُوْا
وَتَتَّقُوْا فَلَكُمْ اَجْرٌ عَظِيْمٌ

அல்லாஹ் உங்களுக்கு மறைவானவற்றைப் பற்றி ஒருபோதும் அறிவிக்க(வும்) மாட்டான். ஆனால் அல்லாஹ் தனது தூதர்களிலிருந்து, தான் நாடியவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். எனவே நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனுடைய தூதர்களிடத்தும் நம்பிக்கை கொண்டு இறையச்சத்தை மேற்கொள்வீர்களாயின் உங்களுக்குப் பெரும் நற்பலன் கிடைக்கும். (3:180)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## கேட்பது மனிதனின் சிறப்பாகும். ஏற்றுக்கொள்வது அல்லாஹ்வின் (சிறப்பாகும்). எவர் புரிந்து கொள்வதில்லையோ, கேட்பதில்லையோ அவர் பொய்யராவார்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### அக்லாக் (நல்லொழுக்கம்) என்பதன் பொருள் என்ன?

இப்போது சிந்தித்துப் பார்க்க வேண்டும், கேட்கவேண்டிய அந்த விஷயங்கள் என்ன? முதலில் அக்லாக் ஆகும். அது மனிதனை மனிதனாக ஆக்குகின்றது. அக்லாக் என்பதிலிருந்து வெறும் மென்மையா நடப்பது என எவரும் பொருள் கொள்ள வேண்டாம். கல்க் மற்றும் குல்க் இரண்டு சொற்களாகும். அவை எதிர்மறையான பொருள்களைக் கொண்டவையாகும். கல்க் வெளிப்படையான படைப்பின் பெயராகும்.

உதாரணமாக காது, மூக்கு. எதுவரையென்றால் முடி போன்றவைவரை அனைத்தும் கல்கில் அடங்கும். குல்க் உட்படையான படைப்பின் பெயராகும். மனிதனையும் மனிதனற்றதையும் வேறுபடுத்திக் காட்டும் உட்படையான ஆற்றல் போன்றவை அனைத்தும் குல்கில் அடங்கும். எதுவரையென்றால் சிந்தனைத் திறன் போன்ற அனைத்து ஆற்றல்களும் குல்கிலேயே அடங்கும்.

குல்கின் மூலமாக மனிதன் தனது மனிதத்தை சரிசெய்கின்றான். மனிதனுக்கு கடமைகள் இல்லையென்றால் அவன் மனிதனா? அல்லது கழுதையா? என்பதை உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும். குல்கில் மாற்றம் வரும்போதுதான் உருவம் நிலை நிற்கின்றது. உதாரணமாக புத்தி பேதலித்து விட்டது என்றால் பைத்தியம் என்று அழைக்கப்படுகிறான். வெறும் வெளித் தோற்றத்தால்தான் மனிதன் என்று அழைக்கப்படுகின்றான்.

எனவே அக்லாக் என்பதன் பொருள், இறைவனின் திருப்தியை (அவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல் ரீதியான வாழ்க்கையில் வெளிப்படையாக தென்படுகின்றது) பெறுவதாகும். எனவேதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயற்சிப்பது அவசியமாகும். இந்த அக்லாக் அஸ்திவாரமாக உள்ளது. அது ஆடிக்கொண்டு இருந்தால் அதன் மீது கட்டிடம் கட்ட முடியாது. அக்லாக் என்பது ஒரு செங்கலின் மீது அடுத்த செங்கலை வைப்பதைப் போன்றதாகும். ஒரு செங்கல் கோணலாக இருந்தால் அனைத்து செங்கற்களும் கோணலாகவே இருக்கும். யாரோ ஒருவர் எவ்வளவு நன்றாகக் கூறியுள்ளார்:

முதலில் வைக்கப்படும் அடிக்கல் கோணலாக இருந்தால் எழுப்பப்படும் சுவரும் கோணலாகவே இருக்கும்.

இவ்விஷயங்களை மிகவும் கவனமாகக் கேட்க வேண்டும். அதிகமான மனிதர்களை நான் பார்த்துள்ளேன், ஆழமாக சிந்தித்துள்ளேன். சிலர் நேர்மையாக இருக்கின்றார்கள் ஆனால் அத்துடன் கோபக்காரர்களாகவும் கடுமையானவர்களாகவும் இருக்கின்றனர். சிலர் மென்மையானவர்களாக இருக்கின்றனர். ஆனால் கருமியாக இருக்கின்றனர். சிலர் கோபம் மற்றும் வேகத்தின் நிலையில் (அவர்களை) கம்பால் அடித்து அடித்து காயப்படுத்தி விடுகின்றனர். ஆனால் பணிவு மற்றும் தன்னடக்கம் பெயருக்கும் இருப்பதில்லை. சிலரைப் பார்த்துள்ளேன். பணிவு மற்றும் தன்னடக்கம் மேலாக இருக்கும். ஆனால் தைரியம் இருப்பதில்லை.

எதுவரையென்றால் பிளேக் மற்றும் காலராவின் பெயரைக் கேட்டதுமே வயிற்றுப்போக்கு ஆரம்பித்து விடுகின்றது. இப்படிப்பட்ட தைரியத்தைக் காட்டாதவருக்கு ஈமான் இல்லை என்று நான் கருதவில்லை. சஹாபாக்களிலும் சிலர் இப்படிப்பட்டவர்களாக இருந்தனர். அதாவது அவர்களுக்கு போர் புரியும் ஆற்றலும் திறனும் இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை குறைபாடு கொண்டவர்களில் சேர்த்து வந்தார்கள். இந்த அக்லாக் நிறைய உள்ளன. நான் சர்வ சமய மாநாட்டின் சொற்பொழிவில் அவை அனைத்தையும் தெளிவாகவும் விரிவாகவும் கூறியுள்ளேன். அனைத்து மனிதர்களும் ஒன்றுபட்ட பண்புகளைக் கொண்டவர்களும் கிடையாது. முற்றிலும் ஒன்றுமற்றவர்களும் கிடையாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 113,114 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### காதியான் தாருல் அமானில் தேசிய இஜ்திமாக்களுக்கான தேதி அறிவிப்பு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் இந்தியாவின் கிளை அமைப்புகளின் (மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ்) தேசிய இஜ்திமாக்களை 16,17,18 அக்டோபர் 2020 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள்.

கிளை அமைப்பின் உறுப்பினர்கள் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறும் இந்த இஜ்திமாக்களில் பங்கு பெற இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம். இந்த இஜ்திமாக்கள் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த வழியாக இருக்கின்றது.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள்தான் மதீனா ஹிஜ்ரத் செய்யப்படுவதற்கு முன்பாக (மதீனாவிற்கு) முதலாவது இஸ்லாமிய முபல்லிக்காக அனுப்பப்பட்டவர் ஆவார்கள். இவர்கள் மூலமாக மதீனாவில் இஸ்லாம் பரவியது**

**ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள்தான் மதீனாவில் ஜுமுஆ தொழுகையை நடத்திய முதல் நபர் ஆவார்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களை நினைவு கூர்ந்தால் இவ்வாறு கூறுவார்கள்: அதாவது நான் முஸ்அப் அவர்களை விட அழகான மற்றும் செல்வ செழிப்பான நிலையில் வளர்க்கப்பட்ட எந்த நபரையும் கண்டதில்லை**

**அழகிய தோற்றத்தைக் கெண்டவரும், தனது குடும்பத்தில் மிகவும் அன்பிற்குரியவராக கருதப்பட்டவரும், பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வுமிக்க சஹாபியான ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர்களாக சஅத் பின் மஆஸ் மற்றும் உஸைது பின் ஹுஸைர் ஆகியோர் ஈமான் கொண்ட சம்பவம் தொடர்பான நற்குறிப்பு**

**கிலாஃபத் அமைப்பு மற்றும் ஜமாஅத் அமைப்பை முழுமையாக பேணி நடந்த, மேலும் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய மற்றும் வக்ஃபின் உரிமையை செலுத்திய மதிப்பிற்குரிய மலிக் முனவ்வர் அஹ்மது ஜாவீது சாஹிப் மற்றும் கடின உழைப்பு, பற்றுணர்வுடன் தொண்டாற்றும் நற்பேற்றைப் பெற்ற மதிப்பிற்குரிய பேராசிரியர் முனவ்வர் ஷமீம் காலித் சாஹிப் ஆகியோரின் வஃபாத் பற்றி குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறியவாறு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 பிப்ரவரி 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **28 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் குரைஷிகளின் பனூ அத்தார் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் சுட்டுப்பெயர் அபூ அப்துல்லாஹ் ஆகும். அது மட்டுமின்றி அவர்களது சுட்டுப்பெயர் அபூ முஹம்மது என்றும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் தந்தையின் பெயர் உமைர் பின் ஹாஷிம் ஆகும். அவர்களின் தாயாரின் பெயர் ஹன்னாஸ் பின்த் மாலிக் ஆகும்.

அவர்களது தாயார் மக்காவில் ஒரு செல்வந்தராக இருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் பெற்றோர் அன்னாரை மிகவும் நேசித்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களை அவர்களின் தாயார் மிகவும் சிறப்பான முறையில் வளர்த்து வந்தார்கள். மேலும் அவர்களுக்கு விலை உயர்ந்த ஆடைகளை அணிவித்தார்கள். மேலும் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் மக்காவிலுள்ள மிகவும் உயர் தரமான நறுமணத்தை பயன்படுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரமி காலணிகளை அவர்கள் அணிந்து வந்தார்கள். இந்த காலணியை குறிப்பாக செல்வந்தர்கள் மட்டுமே அணிந்து வந்தனர். அங்கிருந்து அந்த காலணியை வாங்கி அதை பயன்படுத்தி வந்தார்கள். எவ்வாறிருப்பினும் உயர்தரமான ஆடை, உயர் தரமான நறுமணம் மற்றும் காலணிகளை அவர்கள் வெளியிலிருந்து வரவழைத்து அதை பயன்படுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் மனைவியின் பெயர் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் ஆகும். ஹம்னா பின்த் ஜஹ்ஷ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய மனைவியான உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் அவர்களின் சகோதரி ஆவார்கள். இவர்கள் மூலமாக ஸைனப் என்ற ஒரு மகள் இவர்களுக்கு பிறந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களை நினைவு கூர்ந்தால் இவ்வாறு கூறுவார்கள்: அதாவது நான் முஸ்அப் அவர்களை விட மிகவும் அழகான, தைரியமான, செல்வ செழிப்புடனும் வளர்க்கப்பட்ட எந்த நபரையும் கண்டதில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 85,86 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 71 ஹம்னா பின்த் ஜஹ்ஷ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 157 பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் மிகவும் கண்ணியமிக்க சஹாபாக்களில் ஒருவராக இருந்தார்கள். ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமில் தப்லீக் செய்து வந்த அந்த நேரத்தில் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் தனது தாய் மற்றும் சமுதாயத்தின் எதிர்ப்பிற்கு அஞ்சியவாறு இவ்விஷயத்தை மறைத்து வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக எவருக்கும் தெரியாமல் மறைந்தே வருவார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் தொழுது கொண்டிருப்பதை உஸ்மான் பின் தல்ஹா அவர்கள் பார்த்தபோது அவர்களது குடும்பத்திற்கும், அவரது தாயாருக்கும் தகவல்

கொடுத்தார்கள். பெற்றோர்கள் அன்னாரை சிறை பிடித்தார்கள். அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்யும் வரை அன்னார் சிறைபிடிக்கப்பட்டே இருந்தார்கள். அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கிருந்து வெளியேறினார்கள். மேலும் ஹிஜ்ரத்தும் செய்தார்கள். சில காலங்களுக்குப் பிறகு சில முஹாஜிரீன்கள் அபிஸீனியாவிலிருந்து மக்காவிற்கு திருப்பி வந்தபோது ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களும் அவர்களுடன் திரும்பி வந்தார்கள். அவர்களது தாயார் எந்த நிலைமையில் கண்டார்கள் என்றால் அதன் விளைவாக அன்னாரை எதிர்ப்பதை அவர்கள் விட்டு விட்டார்கள். மேலும் தனது மகனை இதே நிலையில் விட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களுக்கு இரண்டு ஹிஜ்ரத் செய்யும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. முதலில் அபிஸீனியாவிற்கும் பிறகு மதீனாவிற்கும் அன்னார் ஹிஜ்ரத் செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 86 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 175 ஹம்னா பின்த் ஜஹ்ஷ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்த் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் நல்ல செழிப்பான நிலையில் இருந்தபோதும் நான் அவர்களை கண்டுள்ளேன். அவர்கள் முஸ்லிமான பிறகும் நான் அவர்களை கண்டுள்ளேன். இஸ்லாத்திற்காக அவர்கள் எந்த அளவுக்கு கஷ்டங்களை பொறுத்துக் கொண்டார்கள் என்றால், பாம்பின் உடலிலிருந்து அதன் தோல் உரிந்து புதிய தோல் வளர்வதைப் போன்று அவர்களது உடலிலிருந்து அவர்களின் தோல் உரிந்திருந்தது.

(அஸீரத்தன் நபவிய்யா லாபின் இஸ்ஹாக் பக்கம் 230 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆக இவர்கள் இத்தகைய தியாகத்தைத்தான் செய்தார்கள். அது மிகவும் வியப்பிற்குள்ளாக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு நாள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அந்த சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுடன் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் எப்படிப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தார்கள் என்றால் தோலினால் கட்டப்பட்டிருந்தது.

ஒரு நேரம் எப்படிப்பட்ட உயர்தரமான ஆடையை அன்னார் அணிந்திருந்தார்கள்? இப்போது முஸ்லிமான பிறகு எப்படிப்பட்ட நிலைமை என்றால், தோலினால் கட்டப்பட்ட நிலையில் அவர்களது ஆடை இருந்தது. நான் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களைப் பார்த்தபோது அவர்கள் தமது தலையை கீழே குனியச் செய்தார்கள். நாங்களும் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் இந்த நிலையைக் கண்டு அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய இயலாதவர்களாக இருந்தோம். அப்போது ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் எங்களிடம் வந்து சலாம் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அழகிய முறையில் பதிலளித்தார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். உலகவாதிகளுக்கு அவர்களது உலகம் கிடைக்கட்டுமாக. மக்காவின் நகரத்தில் இவர்களை விட மிகச் சிறந்த அருட்கொடையைப் பெற்றிருந்த எவரையும் நான் கண்டதில்லை. முஸ்அப் அவர்களை அத்தகைய நிலையில் நான் கண்டுள்ளேன். இவர்கள் தாய் தந்தையினருக்கு மிகவும் விருப்பத்திற்குரிய மகனாக இருந்தார்கள். ஆனால் இறைவன் மற்றும் அவனது ரஸூலின் அன்பானது இவர்களை இன்று இந்த நிலைக்கு ஆளாக்கியுள்ளது. மேலும் அவர்கள் இறைவனுக்காகவும், அவனது திருப்தியை வேண்டியும் அனைத்தையும் விட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களைக் கண்டபோது அவரது முந்தைய நிலையை நினைவு கூர்ந்தவாறு அழ ஆரம்பித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 86 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் வந்தார்கள். அவர்களது உடலில் தோலினால் கட்டப்பட்டிருந்த ஒரு மேலாடை இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களது இந்த நிலையைக் கண்டபோது, இவர் முன்பு எவ்வாறிருந்தார்? இப்போது எப்படி இருக்கின்றார்? என்பதை நினைவு கூர்ந்து அழுதார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களது நிலை எவ்வாறிருக்கும்? அப்போது உங்களில் ஒருவர் ஒரு ஜோடி ஆடையைக் கொண்டு காலையைப் பொழுதை அடைவார். மற்றொரு ஜோடி ஆடையைக் கொண்டு மாலைப் பொழுதை கழிப்பார். அதாவது எந்த அளவுக்கு அபிவிருத்தி ஏற்படும் என்றால் காலையிலும், மாலையிலும் ஆடையை மாற்றக்கூடிய நிலை ஏற்படும்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவருக்கு முன்பாக ஒரு பாத்திரத்தில் உணவு வைக்கப்படும்போது இரண்டாவது பாத்திரம் எடுக்கப்படும். அதாவது பல வகையான உணவுகள் இருக்கும். இன்று இவ்வாறு தான் இருக்கின்றது. மேலும் கஃபாவின் மீது போடப்பட்டுள்ள துணியைப் போன்று உங்களது வீடுகளில் நீங்கள் போடுவீர்கள். விலை மதிப்பு மிக்க துணிகள் பயன்படுத்தப்படும்.

இந்த விஷயம் இன்று முற்றிலும் நமது கண்களுக்கு முன்னால் உள்ளது. முஸ்லிம்களுக்கு ஏற்படவுள்ள செல்வ செழிப்பான நிலையைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

அப்போது சஹாபாக்கள் கூறினார்கள்: யா ரஸூலல்லாஹ் (ஸல்)! அந்த நேரம் இப்போது நாங்கள் இருப்பதை விட மிக்க நல்ல நிலையில் இருப்போமா? இப்படிப்பட்ட அபிவிருத்தி, இப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் என்றால் பிறகு இறைவணக்கத்திற்காக வெளியேறாமலும், கடின உழைப்பு ஆகியவற்றை நாங்கள் செய்ய வேண்டியதும் வராதா? என்று கேட்டார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை! அந்த நாளை விட இந்த நாள் சிறந்தது. (சுனன் திர்மிதி ஹதீஸ் எண் 2476)

## திருக்குர்ஆனிலிருந்து...

வானங்களிலும் பூமியிலுமுள்ள அல்லாஹ் அவனேயாவான். உங்களின் மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அவன் அறிகிறான். மேலும் அவன் நீங்கள் சம்பாதிப்பதை அறிகிறான். (6:4)

Faizal Hameed Ilahi, Tittacherry

உங்களது நிலைமை, உங்களது இறைவணக்கம், உங்களது தரம் அன்றைய நாளை விட மிகவும் உயர்வானதாகும். அது அப்போது வரக்கூடியவர்களுக்கு வழங்கப்படும். அது அவர்களுக்கு அபிவிருத்தியாக வழங்கப்படும்.

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாயிப் அவர்கள் அபிஸீனியா ஹிஜ்ரத் சம்பவம் பற்றி எழுதியுள்ளார்கள். இது தொடர்பாக நான் இதற்கு முன்பும் மற்ற சஹாபாக்களைப் பற்றி எடுத்துக் கூறும்போது கூறியுள்ளேன். இப்போது சுருக்கமாக கூறி விடுகின்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டு ரஜப் மாதத்தில் 11 ஆண்களும், 4 பெண்கள்களும் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

அவர்கள் எழுதுகின்றார்கள்: இது மிகவும் வியப்பிற்குரிய விஷயமாகும். அதாவது அந்த ஆரம்ப காலத்தில் ஹிஜ்ரத் செய்த முஹாஜிரீன்களில் பெரும்பான்மையினர் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் குரைஷிகளைச் சார்ந்த ஆற்றல்மிக்க கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். பலவீனமான மக்கள் குறைவாகவே தென்பட்டனர். இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெரிய வருகின்றது. ஒன்று, ஆற்றல்மிக்க கோத்திரத்தைச் சார்ந்த மக்களும் கூட குரைஷிகளின் அநீதியிலிருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை. மற்றொன்று, பலவீனமான மக்கள் அதாவது அடிமைகள் போன்றோர் எத்தகைய பலவீனமான நிலையில் இருந்தனர் என்றால் அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கான ஆற்றல் கூட இருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும், மக்கத்து குரைஷிகளுக்கு இந்த மக்கள் ஹிஜ்ரத் செய்தது தெரிய வந்தபோது தமது வேட்டை கையை விட்டு நழுவி விட்டதே என்று கடுமையாக கோபம் அடைந்தனர். எனவே அவர்கள் அந்த முஹாஜிரீன்களை பின் தொடர்ந்தனர். ஆனால் அவர்கள் கடலோரத்தை அடைந்போது அந்த மக்கள் புறப்பட்டுச் சென்று விட்டனர். எனவே இவர்கள் தோல்வியுற்று திருப்பி வந்தனர். அபிஸீனியா சென்றடைந்த பிறகு முஸ்லிம்களுக்கு மிகவும் நிம்மதியான அமைதியான வாழ்க்கை கிடைத்தது. அல்லாஹ் அல்லாஹ் என்று கூறியவாறு குரைஷிகளின் அநீதியிலிருந்து அவர்களுக்கு இரட்சிப்பு கிடைத்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 146,147)

முதலாவது பைஅத்தே உக்பாவின் சந்தர்ப்பத்தில் மதீனாவிலிருந்து வந்திருந்த 12 நபர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள். அந்த மக்கள் மதீனா திரும்பியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்கவும், இஸ்லாத்தின் போதனையை கற்றுக் கொடுக்கவும் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். மதீனாவில் அன்னார் காரி என்ற பெயராலும், ஆசிரியர் என்ற பெயராலும் பிரபல்யம் அடைந்தார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 4 பக்கம் 37 முஸ்அப் பின் உமைர் – 2010 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 175,176 முஸ்அப் பின் உமைர் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பிற்கேற்ப, அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்த அன்ஸார்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், எங்களுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்க ஒருவரை அனுப்புங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களை அனுப்பி வைத்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 1 பக்கம் 171 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் ஹஸ்ரத் அஸ்அத் பின் ஸிராரா அவர்களது வீட்டில் தங்கினார்கள். தொழுகையில் இமாமத் கடமையை நிறைவேற்றி வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் ஒரு நீண்ட காலமாக ஹஸ்ரத் அஸ்அத் பின் ஸிராரா அவர்களின் வீட்டில் தங்கினார்கள். ஆனால் பிறகு ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்களது வீட்டிற்கு இடம் பெயர்ந்தார்கள்.

(ஷா முஹையுத்தீன் அவர்கள் எழுதிய சீரத்துஸ் சஹாபா என்ற நூல், தொகுதி 2 பக்கம் 272 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் பரா பின் ஆஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முஹாஜிர் சஹாபாக்களில் முதலாவதாக எங்களிடம் மதீனாவிற்கு வருகை தந்தது ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களும், இப்னு உம்மே மக்தூம் அவர்களும் ஆவார்கள். மதீனாவிற்கு வந்ததும் இவர்கள் இருவரும் எங்களுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார்கள். பிறகு அம்மார் (ரலி), பிலால் (ரலி), சஅத் (ரலி), மேலும் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) ஆகியோர் சஹாபாக்களை தம்முடன் அழைத்துக் கொண்டு வந்தார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தபோது மதீனத்து மக்கள் எந்த அளவுக்கு மகிழ்ச்சியடைந்தார்களோ அதுபோன்று இதற்கு முன்பு ஒருபோதும் நான் கண்டதில்லை. குழந்தைகள், சிறுமிகள் ஆகிய அனைவருமே, தாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள். எங்களிடம் வருகை தந்துள்ளீர்கள் என்று கூறினர்.

(சஹீஹுல் புகாரி கிதாபுத் தஃப்ஸீருல் குர்ஆன், சூரத்துல் அஃலா ஹதீஸ் எண் 4941)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் தொடர்பாக மேலும் இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்கள்:

தாரே அர்கமில் யாலெல்லாம் நம்பிக்கை கொண்டார்களோ அவர்கள் ஆரம்ப காலத்தில் ஈமான் கொண்டவர்காளக கருதப்படுகின்றனர். இவர்களில் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள் இவர்கள் ஆவர். முதலாவதாக, பனூ அப்துத் தாரைச் சார்ந்த ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) ஆவார்கள். இவர்கள் மிகவும் அழகிய தோற்றத்தை கொண்டிருந்தார்கள். மேலும் தமது குடும்பத்திலும் மிகவும் அன்பிற்குரிய மற்றும் விருப்பத்திற்குரியவராக கருதப்பட்டு வந்தார்கள். இந்த கண்ணியமிக்க நபர்தான் மதீனா ஹிஜ்ரத் செய்யப்படுவதற்கு

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ் உமக்கு ஒரு துன்பத்தைத் தந்தால் அவனையன்றி வேறெவராலும் அதை நீக்க முடியாது. அவன் உமக்கு ஒரு நன்மையைத் தந்தால் அவன் விரும்பியவற்றைச் செய்ய பேராற்றல் பெற்றவனாவான். (6:18)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

முன்பாக முதல் முதலாக மதீனாவிற்கு இஸ்லாமிய முபல்லிக்காக அனுப்பப்பட்டவர்கள் ஆவார். மேலும் இவர்கள் மூலமாக இஸ்லாம் பரவியது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 129)

இன்னொரு வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள்தான் மதீனா ஹிஜ்ரத் செய்யப்படுவதற்கு முன்பாக மதீனாவில் ஜுமுஆ தொழ வைத்த முதல் நபர் ஆவார். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் இரண்டாவது பைஅத்தே அக்பாவிற்கு முன்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், மதீனாவில் ஜுமுஆ தொழுகை நடத்த அனுமதி வேண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் அனுமதி வழங்கினார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் மதீனாவில் ஹஸ்ரத் சஅத் பின் ஹைஸ்மா அவர்களது வீட்டில் முதலாவது ஜுமுஆவை நடத்தினார்கள். இதில் மதீனாவைச் சார்ந்த 12 நபர்கள் கலந்து கொண்டனர். அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் ஓர் ஆட்டையும் அறுத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள்தான் முதல் முறையாக ஜுமுஆ தொழ வைத்த முதல் நபர் ஆவார்கள். ஆனால் மற்றொரு அறிவிப்பில், ஹஸ்ரத் அபூ அமாமா பின் ஸிராரா அவர்கள்தான் மதீனாவில் முதல் முறையாக ஜுமுஆ நடத்தினார்கள் என்றும் வருகின்றது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 87,88 முஸ்அப் பின் உமைர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 1 பக்கம் 171 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள்தான் முதல் முபல்லிக் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் ஹஸ்ரத் அஸ்அத் பின் ஸிராரா அவர்களை அழைத்துக் கொண்டு அன்ஸார்களின்ல பல்வேறு பகுதிகளுக்கு தப்லீக் செய்வதற்காக சென்றார்கள். ஹஸ்ரத் முஸ்அப் அவர்களின் தப்லீக்கின் விளைவால் எண்ணற்ற சஹாபாக்கள் முஸ்லிம்கள் ஆயினர். இதில் மிகவும் பிரசித்தி பெற்ற சஹாபாக்கள் உதாரணமாக, ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ், ஹஸ்ரத் உபாதா பின் பிஷர், ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா, ஹஸ்ரத் உஸைது பின் ஹுஸைர் போன்றோர் அடங்குவர்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 321,326,338 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்அப் அவர்களின் தப்லீக் பணிகள் மற்றும் முயற்சிகள் தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மக்காவிலிருந்து விடைபெறும்போது இந்த 12 புதிய முஸ்லிம்கள், ஏதாவதொரு இஸ்லாமிய முஅல்லிமை எங்களுடன் அனுப்பி வையுங்கள். அவர் எங்களுக்கு இஸ்லாத்தின் போதனையை கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் எங்களது இணை வைக்கும் சகோதரர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றிய பிரச்சாரத்தை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், பனூ அப்துத் தார் கோத்திரத்தைச் சார்ந்த மிகவும் கலப்பற்ற இளைஞரான ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். இஸ்லாமிய முபல்லிக் அன்றைய நாட்களில் காரி என்று அழைக்கப்பட்டு வந்தார். ஏனென்றால் அவர்களது பெரும்பான்மையான பணிகள், திருக்குர்ஆனை எடுத்துக் கூறுவதாகவே இருந்தது. ஏனென்றால், இஸ்லாத்தைப் பரப்புவதற்கு இதுதான் மிகச் சிறந்த வழியாக இருந்தது. எனவே முஸ்அப் அவர்கள் மதீனாவில் ஆசிரியர் என்ற பெயரில் பிரசித்தி பெற்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் மதீனாவிற்கு சென்றடைந்ததும் மதீனாவில் முதலாவதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அஸ்அத் பின் ஸிராரா அவர்களின் வீட்டில் தங்கினார்கள். அவர்கள் மிகவும் கலப்பற்ற கண்ணியமிக்க நபராக திகழ்ந்தார்கள். அவர்களது வீட்டையே தப்லீக்கிற்கான தலைமையகமாக ஆக்கினார்கள். மேலும் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் முழுமையாக செயல்பட்டார்கள். மதீனாவில் முஸ்லிம்களுக்கு ஒன்றுசேர்ந்து வாழ்க்கையைக் கழிப்பதற்கான பாக்கியம் கிடைத்திருந்தது. மேலும் அமைதிகரமான வாழ்க்கை கிடைத்திருந்தது. எனவே அஸ்அத் பின் ஸிராரா அவர்களின் ஆலோசனைக்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களை ஜுமுஆ தொழ வைப்பதற்கான வழிகாட்டலையும் வழங்கினார்கள்.

இவ்வாறு முஸ்லிம்களின் வாழ்க்கை அங்கு இனிதே ஆரம்பமானது. அல்லாஹ்வும் எந்த அளவுக்கு அருள் செய்தான் என்றால், சிறிது காலத்திலேயே மதீனாவின் ஒவ்வொரு வீட்டிலும் இஸ்லாத்தைப் பற்றி சர்ச்சை ஏற்பட்டது. மேலும் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் மிகவும் வேகமாக முஸ்லிம்களாக மாறத் தொடங்கினர். சில சமயங்களில் ஒரே நாளில் பல கோத்திரங்களைச் சார்ந்த அனைவரும் முஸ்லிம்களாயினர். இவ்வாறு அப்துல் அஷ்ஹல் கோத்திரத்தைச் சார்ந்தவர்களும் ஒரே நேரத்தில் ஒன்றாக இணைந்து முஸ்லிம்களாயினர். இந்த கோத்திரம் அன்ஸார்களின் மிகவும் பிரசித்தி பெற்ற அவ்ஸ் கோத்திரத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. இவர்களின் தலைவரின் பெயர் சஅத் பின் மஆஸ் ஆவார்கள். இவர்கள் அப்துல் அஷ்ஹலின் கோத்திரத்தின் தலைவராக மட்டும் இருக்கவில்லை. மாறாக, அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராகவும் திகழ்ந்தார்கள்.

மதீனாவில் இஸ்லாத்தைப் பற்றிய சர்ச்சை ஏற்பட்டபோது சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு இது மிகவும் கஷ்டமாக இருந்தது. மேலும் அவர்கள் இதை தடுக்க நினைத்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக சஅத் பின் மஆஸ் அவர்கள் கடுமையான எதிரியாக இருந்தார்கள். ஆனால் அஸ்அத் பின் ஸிராரா அவர்களின் நெருங்கிய உறவினராக அவர்கள் இருந்தார்கள். அஸ்அத் அவர்களோ இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

எனவே சஅத் பின் மஆஸ் அவர்கள் வெளிப்படையாக இதில் தலையிடாமல் இந்த தீமை பரவக் கூடாது என்று தடுக்க நினைத்தவாறு தனது மற்றொரு உறவினரான உஸைது பின் அல்ஹுஸைர் அவர்களிடம், அஸ்அத் பின் ஸிராராவின் காரணமாக எனக்கு சில தடைகள் இருக்கின்றது. அவர் முஸ்லிமாகி விட்டார். அவர்களது பிரச்சாரத்திற்கு இவனும் ஒத்துழைப்பு வழங்குகின்றான். எனவே நீங்கள் சென்று முஸ்அபை தடுத்து நிறுத்துங்கள். அஸ்அத் பின் ஸிராராவை தடுத்து நிறுத்துவதற்கு பகரமாக முஸ்அபிடம், எங்களுடைய மக்களிடம் மார்க்கமற்ற நிலையை பரப்பாதீர்கள் என்று

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வைப் பற்றி பொய் புனையவோ அல்லது அவனுடைய அடையாளங்களைப் பொய்யாக்கவோ செய்பவனை விட அக்கிரமக்காரன் யார்? நிச்சயமாக அக்கிரமக்காரர்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை. (6:22)

A.Basheer Ahmad, Melapalayam

கூறி அவரை தடுத்து நிறுத்துங்கள். மேலும் அஸ்அதிடம், இந்த வழிமுறை சரியல்ல என்றும் கூறி விடு என்று கூறினார்கள்.

உஸைது அப்துல் அஷ்ஹலின் கண்ணியமிக்க தலைவர்களில் ஒருவர் ஆவார்கள். இவர்களது தந்தை பஆஸ் போரில் அனைத்து அவ்ஸ் கோத்திரத்தினருக்கு தலைவராக இருந்துள்ளார்கள். மேலும் சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு பிறகு உஸைது பின் அல்ஹுஸைர் அவர்களுக்கும் அவ்ஸ் கோத்திரத்தில் மிகப்பெரிய தாக்கம் இருந்தது. எனவே அவர்கள் சஅத் அவர்களின் கூற்றிற்கேற்ப, ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் மற்றும் அஸ்அத் பின் ஸிராரா அவர்களிடம் சென்றார்கள். மேலும் முஸ்அப் அவர்களிடம் கடுங்கோபத்துடன், நீங்கள் ஏன் எங்கள் மக்களை மார்க்கமற்றவர்களாக ஆக்கித் திரிகின்றீர்கள். இதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இல்லையென்றால் இது நல்லதாக இருக்காது என்றும் கூறினார்கள்.

இதற்கு முஸ்அப் அவர்கள் பதில் கூறுவதற்கு பதிலாக அஸ்அத் அவர்கள் முஸ்அப் அவர்களிடம், இவர் தனது கோத்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற தலைவர் ஆவார். இவர்களிடம் மிகவும் அன்புடனும், மென்மையுடனும் பேசுங்கள் என்று கூறினார்கள். எனவே முஸ்அப் அவர்கள் மிகவும் கண்ணியத்துடனும், அன்புடனும் உஸைது அவர்களிடம், நீங்கள் கோப்படாதீர்கள். மாறாக, தயவு கூர்ந்து சிறிது நேரம் இங்கு அமருங்கள். எங்களது கூற்றை கேளுங்கள். பிறகு உங்களது கருத்தை கூறுங்கள் என்று கூறினார்கள்.

எனவே உஸைது அவர்களும் இது சரிதான் என்று கூறியவாறு அங்கு அமர்ந்து விட்டார்கள். பிறகு முஸ்அப் அவர்கள் அவர்களுக்கு திருக்குர்ஆனை படித்துக் காட்டினார்கள். மேலும் மிகவும் அன்பான முறையில் இஸ்லாமிய போதனைகளை எடுத்துக் கூறினார்கள். எனவே இது உஸைது அவர்கள் மீது எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்கள் முஸ்லிமாகி விட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: எனக்குப் பின்னால் எத்தகைய ஒரு நபர் இருக்கின்றார் என்றால் அவர் முஸ்லிமாகி விட்டால் பிறகு முழு கோத்திரமும் முஸ்லிமாகி விடும். நீங்கள் இங்கே இருங்கள். நான் அவர்களையும் இங்கு அழைத்து வருகின்றேன் என்று கூறிவிட்டு உஸைது அவர்கள் எழுந்து சென்றார்கள். ஏதோ சாக்குப் போக்கை கூறி ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் மற்றும் அஸ்அத் பின் ஸிராரா அவர்களிடம் அவர்களை அழைத்து வந்தார்கள்.

சஅத் பின் மஆஸ் அவர்கள் வந்தார்கள். மிகவும் கோபமாக உஸைது பின் ஸிராரா அவர்களிடம், பாருங்கள். அஸ்அதே! நீங்கள் எனது நெருங்கிய உறவினர் என்பதால் ஆகுமானதற்ற பயனைப் பெற்றுக் கொண்டிருக்கின்றீர்கள். இது சரியல்ல. உறவினர் என்பதால் இப்போது நான் அமைதியாக இருக்கின்றேன். எனவே ஆகுமானதற்ற பயனை நீங்கள் அடையாதீர்கள் என்று கூறினார்கள்.

எனவே முஸ்அப் அவர்கள் இதற்கு முன்பு அன்புடனும், மென்மையுடனும் கூறியதுபோன்று இவர்களிடமும், நீங்கள் சிறிது நேரம் இங்கு அமருங்கள். எனது பேச்சுக்களை கேளுங்கள். பிறகு உங்களுக்கு ஏதாவதொரு விஷயத்தில் ஆட்சேபனை இருக்குமென்றால் எனது பேச்சை நிராகரித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு சஅத் அவர்கள், சரி இதுவும் சரிதான் என்று கூறி அங்கு அமர்ந்து விட்டார்கள். பிறகு முஸ்அப் அவர்கள் முன்பு கூறியதுபோன்றே திருக்குர்ஆனை ஓதிக் காட்டினார்கள். இஸ்லாத்தின் தத்துவங்களை விளக்கிக் கூறினார்கள். சிறிது நேரம் கூட ஆகவில்லை. சஅத் அவர்கள் மீது அதன் தாக்கம் ஏற்பட்டது. எனவே சஅத் அவர்கள் குளித்து விட்டு கலிமா ஷஹாதத் கூறினார்கள். அதற்குப் பிறகு சஅத் பின் மஆஸ் மற்றும் உஸைது பின் அல்ஹுஸைர் ஆகிய இருவரும் இணைந்து தமது கோத்திரத்தைச் சார்ந்த மக்களிடம் சென்றார்கள்.

சஅத் அவர்கள் அவர்களிடம், அப்துல் அஷ்ஹல் கோத்திரத்தினரே! நீங்கள் என்னை எவ்வாறு அறிந்திருக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில், நீங்கள் எங்களது தலைவர் ஆவீர்கள். தலைவர்களுக்கெல்லாம் தலைவர் ஆவீர்கள். மேலும் உங்களது கூற்றின் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது என்று கூறினார்கள்.

பிறகு சஅத் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எப்போது வரை அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஏற்றுக் கொள்ளவில்லையோ அப்போது வரை உங்களுடன் எனக்கு எவ்வித தொடர்பும் கிடையாது என்று கூறினார்கள். இதற்குப் பிறகு அவர்கள் இஸ்லாத்தின் தத்துவத்தை எடுத்துக் கூறினார்கள். மேலும் அன்றைய நாளின் மாலைப் பொழுது கூட கழியவில்லை. அதற்குள் முழு கோத்திரமும் முஸ்லிமாகியது. மேலும் சஅத் (ரலி) மற்றும் உஸைது ஆகியோர் தமது கைகளாலேயே தமது சமுதாயத்தின் சிலைகளை உடைத்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) மற்றும் உஸைது பின் அல்ஹுஸைர் ஆகிய இருவரும் அன்றைய நாளில் முஸ்லிமாகினர். இவர்கள் இருவரும் அன்ஸார்களில் கண்ணியமிக்க சஹாபாக்களாக திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எழுதுகின்றார்கள்: எவ்வித சந்தேகமுமின்றி அன்ஸார்களில் இவர்களுக்கு மிகப்பெரிய கண்ணியம் இருந்தது. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. குறிப்பாக சஅத் பின் மஆஸ் அவர்களுக்கு அன்ஸார்களில் எத்தகைய கண்ணியம் இருந்தது என்றால் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்த ஹஸ்ரத் அபூபக்கர் அவர்களுக்குரிய கண்ணியம் இருந்தது. இந்த இளைஞர் மிகவும் கலப்பற்ற, மிகவும் பற்றுணர்வுமிக்க மற்றும் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனர் மீது அளவுக்கு அதிகமாக நேசத்தை வைத்திருந்தார்கள். அவர் தனது கோத்திரத்தின் மிகச் சிறந்த தலைவராகவும் இருந்தார்கள். புத்திக் கூர்மை உடையவராகவும் இருந்தார்கள். மேலும் இஸ்லாத்திலும் சில குறிப்பான சஹாபாக்களுக்க இருந்த கண்ணியம் அந்தஸ்து அவர்களுக்கு இருந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இதில் எவ்வித சந்தேகமுமில்லை. இவர்கள் இளைய வயதில் மரணமடைந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சஅதின் மரணத்தினால் ரஹ்மானின் அர்ஷும் கூட குழுங்கியது. இது உண்மையைக் கொண்டதாகும். ஆக இந்த அளவுக்கு வேகமாக அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தில் இஸ்லாம் பரவிக் கொண்டே சென்றது. யூதர்கள் அச்சமிகு பார்வையுடன் இந்த காட்சிகளை பார்த்துக் கொண்டிருந்தனர். மேலும் உள்ளத்தால், என்ன நடக்கப் போகிறது என்பதை இறைவனே நன்கறிவான் என்று கூறி வந்தனர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நரகத்திற்கு முன் அவர்கள் நிறுத்தப்படும்போது நீர் அவர்களைக் கண்டால், அவர்கள் அந்தோ! நாங்கள் மீண்டும் (உலகிற்கு) அனுப்பப்பட்டால் நலமாக இருக்குமே. (அவ்வாறாயின்) நாங்கள் ஒருபோதும் எங்கள் இறைவனின் அடையாளங்களைப் பொய்யாக்க மாட்டோம். மேலும் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்போம் என்று கூறுவார்கள். **(6:28)**

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 224–227)

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களின் பிரச்சாரத்தின் விளைவாக பல நபர்கள் முஸ்லிமாகினர். அவர்கள் நபித்துவத்தின் 13 ஆம் ஆண்டு ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தின்போது மதீனாவிலிருந்து 70 அன்ஸார்களைக் கொண்ட ஒரு குழுவை மக்காவிற்கு அழைத்துச் சென்றார்கள். இதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் பல்வேறு அறிவிப்புகளிலிருந்து தொகுத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அதாவது நபித்துவத்தின் 13 ஆம் ஆண்டு துல் ஹஜ்ஜா மாதத்தில் ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தின்போது அவ்ஸ் மற்றும் கஸ்ரஜை சார்ந்த பல நூறு மக்கள் மக்கா வந்தனர். அவர்களில் 70 நபர்கள் முஸ்லிமாகி இருந்தனர். அல்லது முஸ்லிமாக விரும்பினர். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக மக்கா வந்திருந்தனர். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களும் அவர்களுடன் வந்திருந்தார்கள். அப்போது முஸ்அப் அவர்களின் தாயார் உயிருடன் இருந்தார்கள். ஆனால் இவர்களுடன் மிகவும் அன்பு வைத்திருந்தார்கள். அவர்களது தாயாருக்கு இவர்களது வருகை பற்றி தெரிய வந்தபோது, என்னை முதலில் வந்து சந்தித்து விட்டு பிறகு வேறிடத்திற்குச் செல்லுமாறு கூறி அனுப்பினார்கள்.

அதற்கு முஸ்அப் அவர்கள், நான் இப்போது வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்து விட்டு பிறகு உங்களிடம் வருகின்றேன் என்று கூறினார்கள். எனவே அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்து முக்கியமான நிலைமைகளைப் பற்றி எடுத்துக் கூறியபிறகு தனது தாயாரிடம் சென்றார்கள்.

அவர்களது தாயார் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு அதாவது என்னை சந்திக்க வரவில்லை என்று கூறி கோபத்தில் அமர்ந்திருந்தார். மேலும் மகனைப் பார்த்து அழவும் செய்தார். பல முறையீடுகளையும் செய்தார். அதற்கு முஸ்அப் அவர்கள், தாயே! நான் உங்களிடம் ஒரு நல்ல விஷயத்தை கூறுகின்றேன். அது உங்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடியது. மேலும் அனைத்துப் பிரச்சனைகளும் முடிவு பெற்று விடும் என்று கூறினார்கள். அதற்கு அவர்களது தாயார், அது என்ன? என்று கேட்டார்கள். அதற்கு முஸ்அப் அவர்கள், மெதுவாக இவ்வாறு பதிலளித்தார்கள். அதாவது சிலை வணக்கத்தை விட்டு விட்டு முஸ்லிமாகி விடுங்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

அந்த பெண் இணை வைப்பவளாக இருந்தாள். இதைக் கேட்டதும் அவள் கூச்சலிட்டவாறு, நட்சத்திரத்தின் மீது ஆணையாக! நான் உனது மார்க்கத்தில் ஒருபோதும் நுழைய மாட்டேன் என்று கூறியவாறு தனது உறவினர்களுக்கு சைகை மூலமாக முஸ்அப் அவர்களை சிறைபிடிக்குமாறு கூறினார். ஆனால் அவர்கள் அங்கிருந்து தப்பித்து வெளியேறினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 227)

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களைப் பற்றிய குறிப்பு தொடர்ந்து எடுத்துக் கூறப்படும். ஆனால் இன்று இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். எனவே அவர்களைப் பற்றியும் எடுத்துக் கூற வேண்டும். எனவே இத்துடன் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களைப் பற்றிய குறிப்பை முடித்துக் கொள்கின்றேன். இன்ஷா அல்லாஹ் அடுத்த குத்பாவில் அவர்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன்.

நான் தொழ வைக்க இருக்கின்ற ஜனாஸாக்களில் முதலாவது நபர் மதிப்பிற்குரிய மலிக் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய மலிக் முனவ்வர் அஹ்மது ஜாவீது சாஹிப் அவர்களுடையதாகும். 22 பிப்ரவரி அன்று தமது 84 வயது வயதில் அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஒரு நீண்ட காலமாக சிறுநீரக பிரச்சனை இருந்தது. அதன் காரணமாக தாஹிர் ஹார்ட் மருத்துவனையில் சிகிச்சை பெற்று வந்தார்கள். பிறகு படைத்த தனது இறைவனிடம் சென்று சேர்ந்தார்கள். மர்ஹூம் மூஸி ஆவார்கள். குடும்பத்தில் ஒரு மனைவியையும், நான்கு மகன்களையும், இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

மலிக் முனவ்வர் அஹ்மது ஜாவீது சாஹிப் அவர்களின் பாட்டனார் ஹஸ்ரத் டாக்டர் ஜஃபர் சவுத்ரி சாஹிப் ஆவார்கள். மேலும் இவர்கள் தரம்கோட் ரந்தாவாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். மேலும் இவர்களின் தாய்வழி பாட்டனார் ஹஸ்ரத் சேக் அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் காஸிபூர் குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இந்த இரண்டு கண்ணியமிக்கவர்களும் அதாவது தாய்வழி பாட்டனாரும், தந்தைவழி பாட்டனாரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள். சஹாபா என்ற அந்தஸ்தை பெற்றிருந்தார்கள்.

மலிக் முனவ்வர் ஜாவீது சாஹிப் அவர்களின் திருமணம் 1968 ஆம் ஆண்டு சூஃபீ ஹாமிது சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகளான சல்மா ஜாவீது சாஹிபா அவர்களுடன் நடைபெற்றது. மொரீஸியஸின் முபல்லிக்கான ஹஸ்ரத் ஹாபிழ் சூஃபி குலாம் முஹம்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் 313 சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். இவ்வாறு மலிக் முனவ்வர் ஜாவீது சாஹிப் அவர்களின் தந்தைவழி மற்றும் தாய்வழி பாட்டனாரும், அவர்களது மனைவியின் தந்தைவழி மற்றும் தாய்வழி பாட்டனார் ஆகிய நான்கு பேரும் அல்லாஹ்வின் அருளால் சஹாபி ஆவார்கள்.

தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பது தொடர்பாக எடுத்துக் கூறியவாறு மலிக் சாஹிப் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

வக்ஃப் செய்வதற்கான கவனம் என்னிடம் எப்படி ஏற்பட்டது என்றால், 1982 ஆம் ஆண்டு அன்ஸாருல்லாஹ் இஜ்திமாவில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹுஸூர் அவர்கள் தமது சொற்பொழிவில் வாழ்க்கையை அர்ப்பணிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியவாறு சொற்பொழிவின் இறுதியில் ஒரு விஷயத்தை கூறினார்கள். அதன் பொருள் என்னவென்றால், உங்களது இறுதி மூச்சு நீங்கள் வக்ஃப் செய்யப்பட்ட நிலையில் வெளியேற வேண்டும் என்று நீங்கள் விரும்பவில்லையா?

**திருக்குர்ஆனிலிருந்து...**

ஒரு நாள், நாம் அவர்கள் எல்லாரையும் ஒன்று சேர்த்து (இறைவனுக்கு) இணை வைத்தவர்களிடம் நீங்கள் உறுதியாக வாதித்த இணைகள் எங்கே? என்று நாம் கோட்போம். (அந்நாளை நினைத்துப் பாருங்கள்). (6:23)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சொற்கள் எனக்கு ஒரு திருப்பு முனையாக இருந்தது. என்னால் வக்ஃப் செய்ய முடியுமா என்று நான் சிந்தித்துக் கொண்டே இருந்தேன்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் அதற்குப் பிறகு தம்மை வக்ஃப் செய்வதாக முடிவெடுத்தார்கள். 10 ஆகஸ்ட் 1983 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் வக்ஃப் செய்வதற்காக விண்ணப்பித்தார்கள். ஹுஸூர் அவர்கள் 18 ஆகஸ்ட் 1983 ஆம் ஆண்டு அவர்களது வக்ஃபை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அதற்கான ஒப்புதலை வழங்கினார்கள்.

மேலும் இவ்வாறு வழிகாட்டினார்கள்: நீங்கள் உங்களது பணிகளை முடித்துக் கொண்டு வந்துவிடுங்கள்.

அந்த சமயத்தில் இவர்கள் தமது தொழிலை செய்து வந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 28 ஆகஸ்ட் 1983 ஆம் ஆண்டு இவர்களை வகாலத் ஸனத் வ திஜாரத் அதாவது வணிகத்துறை தொடர்பான துறையில் பணியமர்த்தினார்கள். 1 அக்டோபர் 1983 முதல் இந்த பணியை செய்யத் தொடங்கினார்கள்.

தன்னை வக்ஃப் செய்வதற்கு முன்பாக ஆரம்பத்தில் 16 ஆண்டுகள் பஞ்சாப் அரசாங்கத்தில் ஊழியராக பணியாற்றி வந்தார்கள். அதற்குப் பிறகு ஏறக்குறைய 10 ஆண்டுகள் தனிப்பட்ட முறையில் தொழில் செய்து வந்தார்கள்.

நவம்பர் 1983 ஆம் ஆண்டு ரிவிய்யூ ஆஃப் ரிலீஜியனில் மேனேஜராக நியமிக்கப்பட்டார்கள். 1984 ல் முஆவின் நாஸிர் ஸியாஃபத்தாக நியமிக்கப்பட்டார்கள். 20 ஏப்ரல் 1987 ஆம் ஆண்டு முதல் 2016 வரை நாயிப் நாஸிர் ஸியாஃபத்தாக இந்த கடமையை நிறைவேற்றும் நற்பாக்கியம் இவர்களுக்கு கிடைத்தது. 1990 ஆம் ஆண்டு யதாமா கமிட்டி அதாவது அனாதைகளுக்கென்று ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. அதில் முதல் செகரட்டரியாக அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஏறக்குறைய 20 வருடங்கள் வரை இந்த தொண்டை செய்வதற்கான நற்பேற்றை பெற்றார்கள்.

1968 முதுல் 1970 வரை பாகிஸ்தான் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் மாவட்ட காயித் ஆகவும், லாஹூரின் இலாகா காயித் ஆகவும் தொண்டாற்றியுள்ளார்கள். இது ஏறக்குறைய 10 ஆண்டுகள் ஆகும். அன்ஸாருல்லாஹ்வில் 1984 முதல் 2014 வரை இவர்களுக்கு தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியம் கிடைத்தது. 1984 முதல் 2014 வரை ஏறக்குறைய 21 வருடங்கள் பாகிஸ்தான் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வில் காயித் தஹ்ரீகே ஜதீத், காயித் தர்பிய்யத், காயித் இஷாஅத், மேலும் கடைசி ஐந்து ஆண்டுகள் பாகிஸ்தானின் நாயிப் சத்ர் அன்ஸாருல்லாஹ் என்ற தொண்டையும் செய்வதற்கான நற்பாக்கியத்தை பெற்றார்கள்.

அரசாங்க வேலை செய்து வந்த அந்த நேரத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு மலிக் ஸாஹிப் அவர்கள் கூறினார்கள்: நாங்கள் பணியில் இருந்தபோது எங்களுக்கு மேலதிகாரியாக இருந்தவர் ஒரு பகைமை உள்ளம் கொண்ட ஒரு நபர் ஆவார். பெரும்பாலும் தமது மவ்லவிமார்களை என்னுடன் விவாதம் செய்வதற்காக அழைத்து வருவார். இவ்வாறு ஒரு முறை பேராசிரியரான காலித் மஹ்மூத் சாஹிப் அவர்களை என்னிடம் அழைத்து வந்தார். இவர் அந்த நேரத்தில் மிகப்பெரிய அறிஞராக இருந்தார். அவருடன் விவாதம் நடைபெற்றது. அந்த அறிஞரால் எவ்வித பதிலையும் தர முடியாமல் ஆன போது இவர் மிகவும் கோபமாகி ஏசிப்பேச ஆரம்பித்தார். இதுதான் அவர்களது ஆலிம்களின் நடைமுறையாக இருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனது மேலதிகாரி இதைக் கண்டு விவகாரம் மோசமடைந்து விடக்கூடாது என்று அஞ்சினார். எனது மேலதிகாரியின் பெயர் அப்துர் ரஹ்மான் ஆகும். அவரைப் பார்த்து இந்த அறிஞர் கூறினார்: மவ்லானா ஸாஹிப்! இந்த மக்கள் இறைவன் மற்றும் அவரது வேதத்தை அதாவது இறை வார்த்தைகளின் மீது எந்த அளவுக்கு அநீதி இழைத்துள்ளனர் என்றால் அல்லாஹ் இவர்களை அழித்திருப்பான். அதாவது அஹ்மதிகள் அல்லாஹ்வின் மீதும், ரஸூலின் மீதும், திருக்குர்ஆனின் மீதும் எந்த அளவுக்கு அநீதி இழைத்துள்ளனர் என்றால் அல்லாஹ் இவர்களை அழித்திருப்பான். ஆனால் ஏன் அழிக்கவில்லை?

தொடர்ந்து கூறுகின்றார்: ஏன் அழிக்கவில்லை என்றால், ஏன் தப்பித்து விடுகின்றனர் என்றால் இவர்கள் தொழுகையில் அதிகமாக அழுகின்றனர்.

மலிக் ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் அவர்களிடம் கூறினேன். அல்லாமா ஸாஹிப் இந்த விஷயத்தை நீங்கள் எனக்கு எழுதித் தாருங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் ஏன் என்று கேட்டவாறு இவ்வாறு கூறினார்: நான் இன்று எழுதிக் கொடுத்து விட்டால் பிறகு நாளை அதனை நீங்கள் பத்திரிகையில் அச்சிட்டு வெளியிட்டு விடுவீர்கள் என்று கூறினார்.

அதாவது அஹ்மதிகள் இறைவன் முன் குனிவதனால் அது அவர்களுக்கு எந்நேரமும் பயனளிக்கின்றது. மேலும் அல்லாஹ் அவர்களது கூற்றை கேட்கின்றான் என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். இருப்பினும் நாம்தான் தவறில் இருககின்றோம் என்று கருதுகின்றனர். அல்லாஹ் இவர்களது கண்களை திறப்பானாக. அவர்கள் சமுதாயத்தை தவறான வழியில் வழிநடத்துகின்றனர். அல்லாஹ் சமுதாயத்தையும் இவர்களது சூழ்ச்சி மற்றும் ஏமாற்று வேலையிலிருந்து காப்பாற்றுவானாக.

நமது முஆவின் நாஸிர் ஸியாஃப் உஸாமா அஸ்ஹர் ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மலிக் முனவ்வர் அஹ்மது ஜாவீது ஸாஹிப் அவர்கள் உயர்தரமான நிர்வாக திறமையைக் கொண்டிருந்தார்கள். இரவில் எழுந்து தாருஸ் ஸியாஃபத்தை சுற்றி வருவார்கள். பணி செய்பவர்களை ஆய்வு செய்வார்கள். கால நிலைகளுக்கேற்ப அவர்களுக்கு தேனீர் மற்றும் முட்டை ஆகியவற்றை ஏற்பாடு செய்து கொடுப்பார்கள். தாருஸ் ஸியாஃபத்தில் பணி செய்யக்கூடிய பணியாளர்களிடம் அன்பின், அனுதாபத்தின் நடைமுறை இருந்தது. ஒவ்வொரு பணியாளரின் வீட்டிலுள்ளவர்களைப் பற்றியும் நன்கறிவார்கள். இரகசியமாக அவர்களால் முடிந்த அளவு அவர்களுக்கு உதவி செய்வார்கள்.

இவர்களது மருமகன் நதீம் ஸாஹிப அவர்கள் எழுதுகின்றார்கள்: மலிக் ஸாஹிப் அவர்கள் ஒரு முறை என்னிடம் கூறினார்கள். அதாவது முதல் விஷயம் என்னவென்றால், அவர்கள் எப்போதும் எனக்கு தொழுகைக்காக கவனமூட்டி வருவார்கள். பிறகு கிலாஃபத் மீதான அன்பு கொள்வதற்கும், மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காகவும் கவனமூட்டி வந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை அவர்கள் என்னிடம் கூறினார்கள்: பணி ஓய்வு வெற்ற பிறகு ஒரு நாள் நான் இவ்வாறு முடிவெடுத்தேன். அதாவது இப்போது நான் பணி ஓய்வு பெற்று விட்டேன். எனவே கட்டாயச் சந்தாவை தற்போதுள்ள வருமானத்திற்கேற்ப பாதியாக குறைத்து விடலாம். ஏனென்றால் வருமானம் குறைந்து விட்டது. எனவே வாக்குறுதிக்கான அந்த

## திருக்குர்ஆனிலிருந்து...

உலக வாழ்க்கை விளையாட்டும், பொழுது போக்குமேயன்றி வேறில்லை. ஆனால் இறையச்சம் உடையவர்களுக்கு நிச்சயமாக மறுமை வீடே சிறந்தது. எனவே நீங்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டாமா? (6:33)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

பட்டியலை தயார் செய்தார்கள். மேலும் தூங்கி விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இரவில் நான் கனவில் பார்த்தேன். அல்லாஹ் என்னிடம் வந்தான். அல்லாஹ் என்னிடம், நான் இந்த பிரபஞ்சத்தின் இறைவன் ஆவேன். நீங்கள் உங்களது சந்தாவை பாதியாக குறைத்து விட்டீர்கள் என்று நான் கேள்விப்பட்டேன். வாருங்கள். நான் இந்த பிரபஞ்சத்தை உங்களுக்கு சுற்றிக் காட்டுகின்றேன் என்று அல்லாஹ் என்னிடம் கூறியவாறு, எனக்கு மலைகளையும், காடுகளையும், தோட்டங்களையும் கனவில் காண்பித்தான். மேலும் என்னிடம், இவை அனைத்திற்கும் நானே அதிபதி ஆவேன். அவ்வாறிருக்கும்போது நீர் எதற்காக கவலைப்படுகின்றீர்கள் என்று கூறினான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதைக்கேட்ட உடன் எனது கண்கள் திறந்தன. மேலும் நான் சந்தாவை பாதியாக குறைப்பதாக எண்ணியிருந்த முடிவை மாற்றி விட்டேன். முன்பு கொடுத்து வந்ததுபோன்றே சந்தாவை கொடுக்க ஆரம்பித்தேன்.

இவர்களது மனைவி கூறுகின்றார்கள்: வாழ்க்கையை அர்ப்பணிப்பதற்கு முன்பாக இவர்கள் வியாபாரம் செய்து வந்தார்கள். அதிகமான தொகையை பையில் போட்டுக் கொண்டு போர்வையை போர்த்தியவாறு இரவு நேரத்தில் ரோட்டிற்கு சென்று விடுவார்கள். மேலும் தேவையுடையவர்கள் இப்போது இருப்பார்கள் என்று கூறுவார்கள். ஒரு முறை ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார். அவர் மிகவும் சிரமத்தில் இருந்தார். அவர் எனது தாயார் கடுமையாக நோயுற்றிருக்கின்றார். என்னிடம் பணம் இல்லை என்று கூறியதும் அவரிடமிருந்த அனைத்து பணத்தையும் அவர்களுக்கு கொடுத்து விட்டார். மேலும் வீட்டிற்கு திரும்பி வந்து விட்டார்.

முஆவின் நாஸிர் ஸியாஃபத் முரப்பி ஆஸிஃப் மஜீத் பட் சாஹிப் கூறுகின்றார்கள்: சில நேரங்களில் விருந்தாளிகளின் வருகை அதிகமாகி விடுவதால் தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்வதில் கஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. சில விருந்தினர்கள் அலுவலகத்திற்கே வந்து கடுமையான சொற்களை பயன்படுத்தி விடுகின்றனர். ஆனால் மர்ஹூம் அவர்கள் மிகுந்த பொறுமையுடன் அந்த அனைத்து விஷயங்களையும் கேட்பார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில நேரங்களில் தமது கைகளை ஒன்றிணைத்தவாறு மன்னிப்பும் கேட்டுள்ளார்கள். அதனை நான் பார்த்துள்ளேன். மர்ஹூம் தமது பிள்ளைகளின் வயதை உடைய நபர்களிடமும் கூட இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளார்கள்.

ஒரு முறை விருந்தினர்கள் திரும்பிச் சென்ற பிறகு நான் அவர்களிடம், மலிக் சாஹிப் எனக்கு மிகுந்த துக்கம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் இந்த சிறுவனிடம் கைகளை ஒன்றிணைத்து மன்னிப்பு கோரினீர்கள் என்று கூறினேன். அதற்கு அவர்கள், உங்களுக்கு ஏன் கஷ்டமாக இருக்கின்றது. நான் எனது கைகளைத்தானே உயர்த்தினேன். இதனை நினைவில் கொள்ளுங்கள். அதாவது இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்கள் ஆவர். அன்னார் விருந்தினர்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக வெறும் காலுடன் ஓடிச் சென்று அவர்களை திருப்பி அழைத்து வந்துள்ளார்கள்.

பிறகு ஆஸிஃப் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒரு நாள் மலிக் சாஹிப் அவர்கள் ஒரு சம்பவத்தை குறிப்பிட்டார்கள். ஒரு முறை நான் எனது அலுவலகத்தில் இருந்தேன். ஒரு நாள் ஒரு முதியவர் கடும் கோபத்துடன் எனது அலுவலகத்திற்கு வந்து பஞ்சாபியில் என்னை நோக்கி, நீங்கள்தான் மலிக் முனவ்வர் ஜாவீதா? என்று கேட்டார். அதற்கு மலிக் சாஹிப் அவர்கள், ஆம் நான் தான் மலிக் முனவ்வர் ஜாவீது என்று கூறினார்கள். அதற்கு அந்த விருந்தினர், இது உமது லங்கர் கானாவா? உமது தந்தையின் லங்கர் கானாவா? என்று கேட்டார். அதற்கு மலிக் சாஹிப் அவர்கள், இல்லை இல்லை. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் லங்கர் கானா ஆகும். இது எனது மற்றும் உங்களது தந்தையான அவர்களது லங்கர் கானாவாகும் என்று கூறினார்கள்.

இதைக் கேட்டு அவர் திருப்பியடைந்தார். மிகவும் அன்புடன் தனது பிரச்சனையை அவர் கூறினார். மேலும் திருப்பிச் சென்று விட்டார். சில நேரங்களில் விருந்தினர்களும் கூட எல்லை மீறி விடுகின்றனர். தாருஸ் ஸியாஃபத்தில் இவ்வாறு நடக்கிறது என்று எனக்கும் புகார் வருகின்றது. ஆனால் ஆய்வு செய்யும்போது, விருந்தினர்களிடமும் பொறுமை இல்லை என்பதே தெரிய வருகிறது.

ஆம் சரிதான். நமது விருந்தினர் துறைக்கு விருந்தாளிகளை கண்ணியப்படுத்த வேண்டும். ஆனால் விருந்தினர்களும் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட சில சந்தர்ப்பங்களில் ஏற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முயற்சி செய்ய வேண்டும்.

எவ்வாறிருப்பினும், மலிக் சாஹிப் அவர்கள் தமது வக்ஃபின் உரிமையை செலுத்தினார்கள். நான் நாஸிர் ஆலா ஆக இருந்தபோதும் அவர்கள் நாயிப் நாஸிர் ஸியாஃபத்தாக இருந்தார்கள். நான் இவர்களைப் பார்த்துள்ளேன். அதாவது இவர்கள் ஜமாஅத்தின் செல்வத்தை மிகவும் உள்ளத்து வேதனையுடன் கையாளுவார்கள். உண்மை விஷயத்தை கூறுவதற்கும் ஒருபோதும் தயங்க மாட்டார்கள். எனக்கு கீழ் அவர்கள் இருந்தாலும் ஜமாஅத்தின் நலன் கருதி அவர்களது பார்வையில் ஏதேனும் ஒரு விஷயம் சிறந்ததாக இருக்குமென்றால் அதனை எவ்வித தயக்கமுமின்றி எனது கருத்திற்கு எதிராக அவர்கள் ஆலோசனை கூறுவார்கள். இவ்வாறு இருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறுவார்கள்.

இந்த நற்பண்பே வாழ்க்கையை அர்ப்பணித்த ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். அதாவது தமது கருத்தை கண்ணியத்தின் வட்டத்திற்குள் இருந்தவாறு சரியான முறையில் எடுத்துக் கூற வேண்டும். மேலும் அன்னாருக்கு கிலாஃபத்துடன் பற்றுணர்வின் தொடர்பு இருந்தது. அது அவர்களது ஒவ்வொரு கடிதத்திலும் வெளிப்பட்டது. எப்போது என்னை சந்தித்ததாலும் அதன் வெளிப்பாடு அதில் இருந்தது. அவர்கள் என்னை இரண்டு முறை சந்தித்துள்ளார்கள்.

அல்லாஹ் இவர்களுடன் கருணையுடனும்ட, மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. அவர்களது அந்தஸ்தை உயர்த்துவானாக. இவர்களது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. மேலும் அவர்களது நன்மையை தொடரச் செய்வதற்கும் அவர்களுக்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய ஷேக் மஹ்பூப் ஆலம் காலித் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய பேராசிரியர் முனவ்வர் ஷமீம் காலித் சாஹிப் அவர்களுடையதாகும். **16** பிப்ரவரி **2020** அன்று ரப்வாவில் ஏறக்குறைய **81** வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

நான் கூறியது போன்று இவர்களது தந்தை ஷேக் மஹ்பூப் ஆலம் காலித் சாஹிப் அவர்கள் டிஐ காலேஜில் பேராசிரியராக இருந்தார்கள். பிறகு மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவர்களை நாஸிர் பைத்துல் மால் ஆமதாக நியமித்தார்கள். நீண்ட காலம் பைத்துல் மால் நாஸிராக இருந்தார்கள். பிறகு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் நியமித்தார்கள். இவர்கள் ஷமீம் அஹ்மது சாஹிப் அவர்களின் மூத்த மகன் ஆவார்கள். இவர்களது குடும்பத்தில் இரண்டு மனைவிகள் அதாவது இரண்டாவது மனைவி ஷாஹிதா முனவ்வரா ஷமீம்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

தொகுதி எண் 4 இதழ் 48 தொடர்ச்சி...

ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்காக வந்திருந்த இர்ஃபான் ஈஜாஸ் சாஹிப் அவர்கள் தனது உணர்வுகளை பகிர்ந்தவாறு கூறுகின்றார்கள்:

ஹுஸூர் அவர்களைப் பார்த்து எனது உணர்வுகளையும், எனது நிலைமைகளையும் என்னால் எடுத்துக் கூற முடியாது. எனது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ஹுஸூர் அவர்கள் மிகவும் அன்புடனும், நேசத்துடனும் உரையாடினார்கள். எங்களுக்கு மிகவும் மன நிம்மதி கிடைத்தது. எனக்கு அழுகை வந்து கொண்டிருந்தது. ஆனால் நான் மிகவும் கஷ்டப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டேன். எனது பேச்சுக்கள் நடுநடுங்கியது. ஹுஸூர் அவர்கள் எனது குழந்தைகளை நேசித்தார்கள்.

எனது குழந்தைகள், ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுக்க வேண்டும் என்றும் அதனை ஃபிரேம் செய்ய வைத்துக் கொள்ள வேண்டும் என்று தமது விருப்பத்தை தெரிவித்தனர். ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றினார்கள். மேலும் குழந்தைகள் தனது அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களிடம் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

ரப்வாவிலிருந்து வந்திருந்த முஹம்மது சாதிக் நதீம் சாஹிப் என்ற நண்பர் கூறுகின்றார்: என்னால் எடுத்துக் கூற முடியாது. அதாவது ஹுஸூர் அவர்களுடனான சந்திப்பானது இறைவனது எத்தகைய மாபெரும் பேருபகாரம் என்றால் என்னால் நன்றி செலுத்துதலின் உரிமையை நிறைவேற்ற முடியாது. ஹுஸூர் அவர்களுடன் எனது சந்திப்பு நடைபெற வேண்டும் என்பதே எனது வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாக இருந்தது. நான் விசா பெற்று இங்கு வந்துள்ளேன். நான் அஸைலம் பெற எண்ணவில்லை. நான் திரும்பிச் செல்வதாக இருந்தேன். ஆனால் ஹாலந்திற்கு ஹுஸூர் அவர்கள் வருகை தந்தபோது விசாவின் காலம் முடியக்கூடிய தருவாயில் இருந்தது. மறுபுறம் நான் எந்நிலையிலும் ஹுஸூர் அவர்களை சந்திக்க விரும்பினேன். நான் மேற்கொண்டு இங்கே தங்க வேண்டுமென்றால் அதற்கு அஸைலம் பெறுவது மட்டும்தான் ஒரே வழியாகும். எனவே நான் அஸைலம் பெற்றேன். எனது வாழ்க்கையின் விருப்பம் இன்று முழுமையானது. இன்று நான் நற்பேறு பெற்ற மனிதன் ஆவேன்.

சர்கோதாவைச் சார்ந்த இம்ரான் அஹ்மது சாஹிப் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: அந்த நேரம் என்னால் பேசுவதற்கு சிரமமாக இருந்தது... ஹுஸூர் அவர்கள் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் நாங்கள் (ஹுஸூர் அவர்களை) பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் உள்ளம் விரும்பியது. எங்களது முழு குடும்பமும் ஹுஸூர் அவர்களின் முகத்தில் ஒளி நிறைந்திருப்பதைக் கண்டோம். எங்களது குழந்தைகளும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். ஹுஸூர் அவர்கள் குழந்தைகள் மீது அதிகமாக அன்பு செலுத்தினார்கள். மேலும் குழந்தைகளுக்கு Chocalate ஐ வழங்கினார்கள்.

காஷ்மீரைச் சார்ந்த ஒரு குடும்பத்தின் தலைவர் அதாவுல் ஹய் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: என்னால் பேச முடியாமல் ஆயிற்று. தன்னை அறியாமலேயே உள்ளம் அழ நாடியது. ஹுஸூர் அவர்களின் முகத்தில் ஒளி நிரம்பியிருந்தது. வாழ்க்கையில் இறைவனது பிரதிநிதியுடன் எனது சந்திப்பு நிகழும் என்பதை என்னால் சிந்தித்துக் கூட பார்த்திருக்க முடியாது. இன்று என்மீது இறைவனது பேரருள் எந்த அளவுக்கு இருக்கின்றது என்றால், என்னால் முழு வாழ்நாளும் நன்றி செலுத்த முடியாது. நான் இறைவனின் பிரதிநிதியை சந்தித்துள்ளேன். இது எனது வாழ்க்கையில் ஒரு சாதாரண சம்பவமல்ல. மேலும் என்னால் இதனை ஒருபோதும் மறக்க முடியாது.

கோயிட்டாவைச் சார்ந்த மக்ஸூது அஹ்மது சாஹிப் அவர்கள் கூறினார்கள்: என்னால் எடுத்துக் கூற முடியாது. நான் என்ன சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை. நான் இதனை கூற விரும்புகின்றேன். அதாவது இன்று நான் ஹுஸூர் அவர்களை சந்தித்த பிறகு எனது அனைத்துப் பிரச்சனைகளும் முடிவு பெற்று விட்டன. அனைத்து தடைகளும் நீங்கி விட்டன. எனது உள்ளம் சுமையை உணரவில்லை. மேலும் எனக்கு அதிகமான மன நிம்மதி கிடைத்துள்ளது. இன்றைய சந்திப்பு எனது வாழ்க்கையின் மிக முக்கிய சம்பவமாகும்.

இறைவனுக்கே நன்றி. எனது வாழ்க்கையில் (ஹுஸூர் அவர்களை) சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்து விட்டது. ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்காக மக்கள் வரிசையாக நின்று கொண்டிருப்பதை நான் MTA வில் பார்த்திருக்கின்றேன். நானும் இந்த மக்களுடன் இணைந்து ஹுஸூர் அவர்களை பார்க்க முடியுமா? என்று நான் எண்ணிப் பார்த்திருக்கின்றேன். இன்று அல்லாஹ் எனது உள்ளத்தின் விருப்பத்தை நிறைவேற்றி விட்டான். நான் ஹுஸூர் அவர்களை பார்க்க மட்டும் செய்யவில்லை. மாறாக, ஹுஸூர் அவர்களை சந்திக்கக் கூடியவர்களையும், ஹுஸூர் அவர்களுடன் உரையாடக் கூடியவர்களுடன் நான் இணைந்து விட்டேன். இதுவே எனது வாழ்க்கையின் விலைமதிப்புமிக்க செல்வமாகும்.

ரப்வாவிலிருந்து வருகை தந்திருந்த தாஹிர் மஹ்மூது சாஹிப் அவர்கள் தனது குடும்பத்துடன் ஹுஸூர் அவர்களை சந்தித்த பிறகு அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார்கள். அவர்களது அனுபவத்தைப் பற்றி கேட்டபோது அவர்கள் கூறினார்கள்: நாங்கள் ஒரு நீண்ட காலமாக இந்த நாட்களுக்காக ஏங்கிக் கொண்டிருந்தோம். மிகவும் நற்பேறு பெற்ற மக்களுக்குத்தான் இந்த நாள் கிடைக்கின்றது. எனது குடும்பத்தை சார்ந்தவர்கள் தனது வாழ்நாளில் முதல் முறையாக இப்போதுதான் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை மிகவும் அருகில் கண்டுள்ளார்கள். எனது மூன்று குழந்தைகள் வக்ஃபே நவ் ஆவர். எனது ஒரு மகள் வக்ஃபே நவ் திட்டத்தில் இல்லாமல் இருந்ததினால், நான் வக்ஃபே நவ் இல்லையே என்று அழுதாள். ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் அவளது உள்ளத்தை ஆறுதல்படுத்தினார்கள். மேலும் நீங்கள் மருத்துவர் ஆகுங்கள் என்று கூறினார்கள்.

அவர் கூறுகின்றார்: எனக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கின்ற உதவிகளை நான் நிறுத்தி விட்டேன். அதற்கு அவர்கள் இதனால் உங்களுக்கு அதிகமான கஷ்டங்கள் ஏற்படும் என்று கூறினார்கள். அதற்கு நான் அவர்களிடம், நான் நன்றாக உழைத்து, பணி செய்து வாழ்க்கையை கழிப்பேன் என்று கூறினேன். மேலும் இதைப் பற்றி நான் ஹுஸூர் அவர்களிடம் கூறியபோது, ஹுஸூர் அவர்கள் எனக்காக அதிகமாக துஆ செய்தார்கள். இப்போது எனக்கு எந்த கவலையும் கிடையாது. எனது அனைத்துப் பணிகளும் இறைவனது அருளால் முழுமை ற்று விடும்.

ரப்வாவிலிருந்து வந்திருந்த மதிப்பிற்குரிய சுல்தான் அஹ்மது சாயிப் அவர்கள் கூறினார்கள்: இன்று இறைவனது மாபெரும் அருள் ஏற்பட்டுள்ளது. நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றேன். இன்று எனது வாழ்க்கையில் முதல் முறையாக (ஹுஸூர் அவர்களை) சந்தித்துள்ளேன். பாகிஸ்தானில் இருக்கும்போது எனது வாழ்நாளில் ஹுஸூர் அவர்களை சந்திப்பேன் என்று கற்பனை செய்து கூட பார்க்கவில்லை. ஹுஸூர் அவர்களை MTA வில் பார்த்து வந்துள்ளேன். இன்று நான் மிகவும் நற்பேறு பெற்றவனாக இருக்கின்றேன். மேலும் இந்த நற்பேற்றினால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன்.

பாகிஸ்தானிலுள்ள குஜராத்தைச் சார்ந்த இனாயத் மஹர் சாஹிப் 1999 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். மேலும் தமது குடும்பத்தில் அவர் மட்டுமே அஹ்மதி ஆவார். அவர்கள் கூறினார்கள்:

ஹுஸூர் அவர்களைப் பார்த்து, நான் ஹுஸூர் அவர்களுக்கு அருகில் இருக்கின்றேன். மேலும் ஹுஸூர் அவர்களை பார்த்துக் கொண்டிருக்கின்றேன் என்ற நம்பிக்கையே எனக்கு வரவில்லை. காலத்தின் கலீஃபாவிற்கு முன்பு நமது உணர்வுகளை கட்டுப்படுத்துவது சிரமமான விஷயமாகும். ஹுஸூர் அவர்களின் முகத்தின் மீது பார்வை பட்டதும், ஹுஸூர் அவர்களை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று உள்ளம் விரும்பியது. மேலும் பார்வையை அகற்ற உள்ளம் விரும்பவில்லை.

நான் ஜெர்மனி ஆண்டு மாநாட்டிற்குச் சென்றேன். ஹுஸூர் அவர்களை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக எப்போதும் ஹுஸூர் அவர்களுக்கு அடுத்த வரிசையில்தான் அமர்ந்திருப்பேன். எவ்வளவு பார்த்தாலும் உள்ளம் நிறையாது. இன்று மிகவும் அருகில் இருந்தவாறு ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான நற்பாக்கியத்தைப் பெற்ற மனிதன் நான் ஆவேன்.

ஹுஸூர் அவர்களுடனான இந்த சந்திப்பு 8:15 வரை நீடித்தது. இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் பைத்துன் நூர் வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்குச் சென்று விட்டார்கள்.

### 27 செப்டம்பர் 2019 – வெள்ளிக்கிழமை

ஹுஸூர் அவர்கள் காலை 6 மணிக்கு பைத்துன் நூர் பள்ளிவாசலுக்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்குச் சென்று விட்டார்கள்.

காலையில் ஹுஸூர் அவர்கள் அலுவலக பணிகளை மேற்கொண்டார்கள். இன்று ஜுமுஆ நாளாக இருந்தது. இன்றைய நாள் அல்லாஹ்வின் அருளால் ஹாலந்து ஜமாஅத்தின் 41 வது ஆண்டு மாநாடு ஆரம்பமாக இருந்தது. இன்று ஆண்டு மாநாட்டின் முதல் நாளாகும்.

ஆண்டு மாநட்டை நடத்துவதற்காக ஜமாஅத்தின் தலைமையகமான பைத்துன் நூர் அருகிலேயே ஒரு விளையாட்டு அரங்கம் பெறப்பட்டது. மேலும் அங்கு ஆண்களுக்கான திடல் அமைக்கப்பட்டது. பைத்துன் நூர் சுற்றுப் புறத்திலேயே லஜ்னாக்களுக்கான கூடாரங்கள் அமைக்கப்பட்டு திடல் அமைக்கப்பட்டது. ஹாலாந்தின் அனைத்து ஜமாஅத்தைச் சார்ந்த உறுப்பினர்களும் காலையிலிருந்தே பைத்துன் நூர் பகுதிக்கு வரத் துவங்கினர். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையைச் சார்ந்தவர்கள் வியாழக்கிழமை மாலைப்பொழுதிலேயே வந்து சேர்ந்திருந்தது. ஆனால் பெரும்பான்மையினர் வெள்ளிக்கிழமை காலைப்பொழுதில் வந்தடைந்தனர்.

ஹாலந்து ஜமாஅத் மட்டுமின்றி, ஜெர்மனி, பிரித்தானிய்யா, பெல்ஜியம், இத்தாலி, கோயிட்டா மாலா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், மால்டா, ஃபின்லாந்து, சுவிட்சர்லாந்து, சுவீடன், டென்மார்க், நார்வே, துபாய், அமெரிக்கா, கனடா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு குடும்பங்கள் ஹாலந்து ஆண்டு மாநட்டில் கலந்து கொள்வதற்காக வந்து சேர்ந்தனர்.

மேலும் ஐரோப்பாவின் சில நாடுகளிலிருந்து சில குடும்பங்கள் 400 முதல் 500 கிலோ மீட்டர் வரை நீண்ட பயணத்தை மேற்கொண்டு ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஹாலந்து வந்திருந்தார்கள். ஜுமுஆவிற்கு முன்பாகவே ஆண்கள் மற்றும் பெண்களின் திடல் நிரம்பி இருந்தது. மேலும் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2500 நபர்களை விட அதிகமாகும்.

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 1.55 மணிக்கு ஹுஸூர் அவர்கள் கொடியேற்றி வைப்பதற்காக வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்கள் பைத்துன் நூர் பள்ளிவாசலின் உட்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றினார்கள். மேலும் ஹாலந்து அமீர் சாஹிப் அவர்கள் நாட்டின் கொடியை ஏற்றினார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்.

கொடி ஏற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்தார்கள். மேலும் குத்பா ஜுமுஆ நிகழ்த்தினார்கள். ஜுமுஆ தொழுகையுடன் ஹாலந்து ஆண்டு மாநாடு இனிதே ஆரம்பமானது.

ஹுஸூர் அவர்களின் குத்பா ஜுமுஆ 2:50 மணி வரை இருந்தது. மேலும் MTA விலும் நேரடியாக ஒளிபரப்பாகியது. அரபி மொழி மட்டுமின்றி உள்ளூர் மொழியான டச் மொழியில் உள்ளூர் அளவில் மொழியாக்கம் செய்யப்பட்டது. ஹுஸூர் அவர்கள் ஜுமுஆ தொழுகையுடன் அஸர் தொழுகையையும் சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு சென்றார்கள்.

### ஆமீன் நிகழ்ச்சி

அந்நாளின் மதிய வேளையிலும் ஹுஸூர் அவர்கள் அலுவலக பணியை மேற்கொண்டார்கள். மேலும் இரபு 8 மணிக்கு ஆண்கள் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்தார்கள். மேலும் ஆமீன் நிகழ்ச்சி ஆரம்பமானது. ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் கீழ்க்கண்ட 27 நபர்களிடமும் திருக்குர்ஆனின் சில வசனங்களை கேட்டார்கள். மேலும் இறுதியில் துஆ செய்தார்கள்.

1. ஃபஹது பஷீர் சவுத்ரி
2. ஹஸ்கீல் அஹ்மது
3. ஷாபில் அஹ்மது
4. ரோஷன் குரைஷி

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக உமக்கு முன்னர் வந்த தூதர்களும் பொய்ப்படுத்தப்பட்டனர். அவர்கள் பொய்ப்படுத்தப்பட்டதுடன் துன்புறுத்தப்பட்டிருந்தும் அவர்களுக்கு நம் உதவி வரும் வரை அவர்கள் பொறுமையாயிருந்தனர். அல்லாஹ்வின் வசனங்களை மாற்றுபவன் எவனுமில்லை. இத்தூதர்களின் செய்திகள் நிச்சயமாக உம்மிடம் வந்தே இருக்கின்றன. (6:35)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 02 April 2020 Issue No. 14

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

5. துல்கிஃப்ல்
6. துல்கர்னைன்
7. முஹம்மது பாஸில் ஆரிஃப்
8. ஷர்ஜபீல் அஹ்மது
9. ஸமான் சவுத்ரி
10. ரியான் சவுத்ரி
11. முஹம்மது ஜரீவுல்லாஹ்
12. அன்ஸர் அஹ்மது
13. ஹுஸ்ஸான் அஹ்மது
14. தானீஸ் அஹ்மது பத்ர்
15. ஹாதிக் அஹ்மது
16. அஹ்ஸன் அஹ்மது
17. ரியான் அஹ்மது சித்தீக்கி
18. ஜீஷான் அஹ்மது
19. அத்ஹர் அஹ்மது
20. ஷாயான் அஹ்மது
21. ரமீஸ் அப்பாஸ் காஸி
22. மிஃராஜ் அஹ்மது ஷாயான்
23. மஃஹிது அஹ்மது அக்கீல்
24. ஜீஷான் வஹீது
25. ஹஸீப் அஹ்மது
26. காம்ரான் ஈஜாஸ்
27. இம்ரான் ஈஜாஸ்

ஆமீன் நிகழ்ச்சியில் பங்கு பெற்ற இந்த நற்பேறு பெற்ற குழந்தைகள் ஹாலந்தின் கீழ்க்கண்ட ஜமாஅத்துகளைச் சார்ந்தவர்கள் ஆவர்:

*Nunspeet*
*Zwolle*
*Amstelveen*
*Almere*
*zoetermeer*
*Arnhem*
*Maastricht*
*DenHaag*
*Rotterdam*
*Eindhoven*

ஆமீன் நிகழ்ச்சிக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஜமு தொழ வைத்தாள்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்குச் சென்றார்கள்.

*(தொடரும், இன்ஷா அல்லாஹ்...)*

*(9 வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

சாஹிபா ஆவார்கள். முதன் மனைவி மரணமடைந்து விட்டார்கள். அவர்களுக்கு காலித் அன்வர் என்ற மகன் இருக்கின்றார். அவர் கனடாவில் இருக்கின்றார். 1964 ஆம் ஆண்டு மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் காலேஜில் பிரின்ஸ்பலாகவும், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சதராகவும் இருந்தபோது முனவ்வர் ஷமீம் காலித் சாஹிப் அவர்களின் நிக்காஹ்வை முபாரக் பள்ளிவாசலில் நடத்தி வைத்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் சாஹிப் அவர்கள் இந்த சொற்களை கூறினார்கள்: அதாவது பேராசிரியர் முனவ்வர் ஷமீம் காலித் எனது நெருங்கிய நண்பர் ஆவார். அவர்களது மகனான பேராசிரியர் மெஹ்பூப் ஆலம் காலித் சாஹிப் அவர்கள் எனக்கும் எனது மகனைப் போன்று நேசத்திற்குரியவர் ஆவார். அன்னார் பாகிஸ்தான் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வில் ஏறக்குறைய 28 ஆண்டுகள் தொண்டாற்றி உள்ளார்கள்.

அன்னாரின் இரண்டாவது மனைவி ஷாஹிதா சாஹிபா கூறுகின்றார்கள்: முனவ்வர் ஷமீம் காலித் சாஹிப் அவர்கள் எண்ணற்ற நற்பண்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். அவர்களிடம் காணப்பட்ட முதலாவது பண்பு, காலத்தின் கலீஃபாவின் மீது கலப்பற்ற அன்பு மற்றும் கொள்கைப் பிடிப்பை கொண்டிருந்தார். கட்டுப்பட்டு நடந்தார். மேலும் குத்பாவை கவனமாக கேட்பார். பிறகு குறிப்பும் எடுப்பார். ஐவேளை தொழுகையை ஜமாஅத்தாக தொழுது வந்தார்கள். நோயுற்ற நிலையில் பள்ளிவாசலுக்கு செல்ல முடியாத நிலை இருந்தபோது அதை அதிகமாக உணர்ந்து வந்தார்கள். பள்ளிக்கு செல்ல முடியவில்லையே என்று வருத்தப்பட்டு வந்தார்கள்.

அவர்கள் தமது நோயின் நிலையிலும் மிகவும் பொறுமையுடன், தைரியத்துடன் அதை எதிர்கொண்டார்கள். எப்போதும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று கூறி வந்தார்கள். மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதில் கலப்பற்றதன்மை, பற்றுணர்வு மற்றும் அன்பின் மிகச்சிறந்த பண்புகள் அவர்களிடம் இருந்தன. மௌனமாக தொண்டாற்றக்கூடியவர் ஆவார். பரிவுகாட்டக்கூடிய மற்றும் அன்பு செலுத்தக்கூடிய நபராவார்.

அவர்கள் எனக்கு கல்லூரியில் படித்துக் கொடுத்திருக்கின்றார்கள். சிறிது காலம் நான் அவர்களது மாணவனாக இருந்துள்ளேன். அதற்குப் பிறகு நான் உள்ளூர் அமீராகவும், நாஸிர் ஆலாவாகவும் ஆன பிறகு மிகவும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டார்கள். நீங்கள் எனது மாணவர் ஆவீர்கள் என்பதை ஒருபோதும் அவர்கள் வெளிப்படுத்தியது கிடையாது.

கிலாஃபத் அமைப்பு மற்றும் ஜமாஅத் அமைப்பை முழுமையாக பேணி நடப்பார்கள். கட்டுப்பட்டு நடப்பார்கள். கலீஃபா ஆன பிறகும் கூட அவர்களது தொடர்பு அவ்வாறே வியக்கத்தக்கதாக இருந்தது. அல்லாஹ் இவர்களுடன் மன்னிப்புடனும் கருணையுடனும் நடந்து கொள்வானாக. தமது அன்பிற்குரியவர்களின் நெருக்கத்தில் இடமளிப்பானாக. இவர்களது குடும்பத்திற்கு அன்னாரது நன்மைகளை தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இந்த இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad